MAY 2022 **P/ID 35311/PTL1A**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. பாஞ்சாலி சபதத்தின் காப்பிய அமைப்பினை எழுதுக.
2. தருமனின் மனதைச் சகுனி மாற்றக் காரணமென்ன?
3. பாஞ்சாலி செய்த சபதம் யாது?
4. பாரதிதாசன் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
5. கதிரைவேல் மன்னன் எவ்வாறு இறந்தான்?
6. பேழை குறித்து எழுதுக.
7. புதுக்கவிதை முன்னோடிகள் சிலரைக் குறிப்பிடுக.
8. வள்ளுவரின் தனித்தன்மையைக் கூறுக.
9. புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு உதவிய இதழ்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
10. இராமானுஜரின் பிறப்பினைச் சுட்டுக.
11. இராமானுஜரின் மனிதநேய மாண்பினை எழுதுக.
12. இராமானுஜரின் சீர்திருத்த நடவடிக்கைகள் யாவை?

பகுதி ஆ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. அர்ஜுனன் செய்த சபதத்தினை எடுத்துரைக்க.

14. தருமன் சூதாடச் சம்மதிக்கக் காரணம் என்ன? விளக்கம் தருக.

15. அன்னத்திற்கு ஏற்பட்ட துன்பத்தினை பாண்டியன் பரிசு வழி நின்று விளக்குக.

16. வேழ மன்னனின் செயல்பாடுகளை எடுத்தெழுதுக.

17. எட்டாவது சீர் குறித்து தமிழன்பன் கூறுமாற்றைத் தொகுத்துரைக்க.

18. இராமானுஜரின் கல்வி குறித்து விவரி.

19. இராமானுஜரின் சமயப் பணிகளை எடுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. துகில் உரிதல் சருக்கத்தினை விவரிக்க.

21. சகுனி கதாபாத்திரத்தைத் திறனாய்க.

22. பாரதிதாசனின் கவிச்சிறப்பை பாண்டியன் பரிசு வழி நின்று விளக்குக.

23. தமிழன்பனின் கவிதைப் போக்கும் கருத்து வீச்சும் குறித்து விரித்துரைக்க.

24. இராமானுஜர் எதிர்கொண்ட இன்னல்களை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கி வரைக.

———————